# பியூரிட்டன்களின் பார்வையில்
# மனந்திரும்புதல்

ஆர். பாலா

RP
REFORMED PUBLICATIONS
சீர்திருத்த வெளியீடுகள்

**பியூரிட்டன்களின் பார்வையில் மனந்திரும்புதல்**

*ஆர். பாலா*

*முதல் பதிப்பு: ஏப்ரல்* 2021

***சீர்திருத்த வெளியீடுகள்***
6/87 *காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை* 600023.
*தமிழ்நாடு, இந்தியா.*
*கைப்பேசி:* +91 9445671113
*ஈமெயில்:* msjamesin@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.org *வலைப்பூவைப் பார்க்கவும்.*

# நூல் பற்றிய சில வரிகள்

"இந்த உலகத்தில் விசுவாசிகளுக்கு மிகவும் அவசியமான இரண்டு மகா கிருபைகள் விசுவாசமும் மனந்திரும்புதலும். இந்த இரண்டு இறக்கைகளையும் பயன்படுத்தியே அவர்கள் பரலோகத்தை நோக்கிப் பறக்கிறார்கள். இயற்கையை வெப்பமும், ஈரப்பதமும் பாதுகாப்பதுபோல் விசுவாசமும், மனந்திரும்புதலும் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பாதுகாக்கின்றன. நான் விளக்கப்போகின்ற கிருபை 'மனந்திரும்புதல்'" என்ற வார்த்தைகளோடு 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த பியூரிட்டன் பெரியவரான தோமஸ் வொட்சனின் மனந்திரும்புதல் நூலுக்கான வாசகர் அறிமுகம் ஆரம்பமாகிறது. இந்த வார்த்தைகளை அவர் எழுதியபோது, தான் எழுதுகிற நூல் நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகும் கிறிஸ்தவர்கள் மத்தியில் காலத்தால் அழியாத தரமான நூலாகப் பயன்படுத்தப்படப் போகிறது என்பதை அறிந்திருந்திருக்க மாட்டார்.

கோவிட்–19 உலக நாடுகளின் எல்லைகளை மூட ஆரம்பித்தபோது, மார்ச் 2020ல், தமிழ் கிறிஸ்தவ சபைகளுக்கு இணையத்தில் (Zoom) தோமஸ் வொட்சனின் மனந்திரும்புதல் நூலை விளக்கிப் போதிக்கலாம் என்று தீர்மானித்தேன். அதை ஏற்கனவே ஆங்கிலத்தில் வாசித்திருந்தபோதும், இந்த விளக்கவுரைகள், ஒரு புதிய அனுபவத்தை அளிக்கப் போகின்றன என்பதை நான் அறிந்திருக்கவில்லை. லேமென் இவெஞ்சலிக்கள் ஐக்கியத்தினால் (LEF) வெளியிடப்பட்டிருந்த தமிழ் மொழிபெயர்ப்பையும் இதற்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம்

என்று முடிவு செய்தேன். அந்த மொழிபெயர்ப்பு தரமானதாக இருக்கவில்லை; கடமைக்காக செய்யப்பட்டதாக, குறைபாடு களுள்ளதாக இருந்தது. அதனால் ஆங்கில நூலைப் பயன்படுத்தியே பெரும்பாலும் இந்த விரிவுரைகளைத் தயாரித்தேன்.

இந்த விரிவுரைகளைத் தயாரிக்கும்போது ஒவ்வொன்றையும் பின்னால் பயன்படும் என்று கருதி முழுமையாக எழுத்தில் வார்த்திருந்தேன். இவை பதினாறு வாரங்களுக்குக் கொடுக்கப் பட்டவை. தோமஸ் வொட்சனின் நூலின் கருப்பொருள் தொடர்பான அனைத்துப் போதனைகளையும் இதில் விளக்கியிருக்கிறேன். உண்மையில் தோமஸ் வொட்சனின் நூலை நான் மனந்திரும்புதலாகிய போதனையை விளக்கு வதற்கான அடிப்படை நூலாகப் பயன்படுத்தினேன் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில், வொட்சனில் மட்டும் தங்கியிராமல் இந்தத் தலைப்பு பற்றி விளக்கியிருந்த பியூரிட்டன்களில் ஒருவரான தோமஸ் பொஸ்டனின் நூலையும் (மனந்திரும்புதல்), பியூரிட்டன் என்று அழைக்கக்கூடிய, ஆனால் 19ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜோன் கல்ஹூன் என்பவரின் நூலையும் (இவெஞ்சலிக்கள் மனந்திரும்புதல்) இதற்குப் பயன்படுத்தினேன். இந்த மூவரும் மனந்திரும்புதல் பற்றிய போதனையில் ஒரே கருத்தைக் கொண்டிருந்தவர்கள்; சீர்திருத்த, பியூரிட்டன் இறையியலைத் தெளிவாக அறிந்திருந்து போதித்தவர்கள். மூவரும் சிறப்பான போதகப்பணியில் ஈடுபட்டிருந்தவர்கள். இவர்களைப் பற்றிய குறிப்புகளையும் நூலுக்குள் காணலாம். 17ம் நூற்றாண்டுப் பியூரிட்டன்களின் அசைக்கமுடியாத வேதநம்பிக்கைகளின் அடிப்படையில் மனந்திரும்புதல் இந்நூலில் விளக்கப்பட்டிருப்பதால் இதற்கு 'பியூரிட்டன்களின் பார்வையில் மனந்திரும்புதல்' என்று தலைப்பிடத் தீர்மானித்தேன். அதுவே தலைப்பாக இருந்தாலும், இந்நூல் இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் தெளிவாக விளக்கியிருக்கும் மனந்திரும்புதலைப் பற்றியே விளக்குகிறது என்பதை வாசகர்கள் மறந்துவிடக்கூடாது.

இந்நூலின் கருப்பொருளாகிய மனந்திரும்புதல் இருக்க வேண்டிய விதத்தில் இல்லாத இடத்தில் கிறிஸ்தவ விசுவாசம் இருக்கமுடியாது என்பதை நூல் முழுவதும் விளக்கியிருக்

*கிறேன். இந்த 21ம் நூற்றாண்டில் அந்த அவசியமான மனந்திரும்புதல் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் பரவலாகப் பிரசங்கிக்கப்படுவதில்லை. அந்தளவுக்கு இறையியல் சத்தற்ற பிரசங்கங்களே சுவிசேஷம் என்ற பெயரில் கொடுக்கப்பட்டு வருகின்றன. கிறிஸ்து தரும் மெய்யான விசுவாசத்தையும், விசுவாச வாழ்க்கையையும் நாடுகிறவர்களுக்கு இந்நூல் நிச்சயம் பலனளிக்கும்.*

*இந்த விரிவுரைகள் ஒவ்வொன்றையும் தயாரிக்கும்போதும் அவற்றைப் போதிக்கும்போதும் கர்த்தரின் ஆவியானவர் எனக்கு அதிகம் துணைசெய்திருக்கிறார். அந்தளவுக்கு இவற்றை அனுபவித்துத் தயாரித்தேன். ஆவியானவரின் வழிநடத்துதலை ஒவ்வொரு விரிவுரையைத் தயாரித்தபோதும், போதித்தபோதும் கண்டிருக்கிறேன். உழைத்துத் தயாரிக்கும் எதிலும் ஆவியானவர் இருக்கமாட்டார் என்ற முட்டாள்தனமான எண்ணத்தைச் சிலர் கொண்டிருக்கிறார்கள். அதற்குமாறாக, வேதம் விளக்குகிறபடி உழைத்து அர்ப்பணிப்போடு செய்யப்படுகிற எந்தப் பணியிலும் மட்டுமே ஆவியானவர் இருக்கிறார் என்பதை மறுபடியும் இதில் நான் உணர்ந்தேன்.*

*இந்த விரிவுரைகளை நூலாகப் படைக்கவேண்டுமென்று சிலர் என்னிடம் கேட்டார்கள். இவற்றைத் திருமறைத்தீபம் யூடியூப் காணொளியிலும் பதிவுசெய்திருக்கிறோம். நூலை அருமையாகத் தயாரித்து அச்சிடும் அத்தனை உழைப்பையும் சீர்திருத்த வெளியீடுகளின் நிர்வாகியான சகோதரன் ஜேம்ஸ் செய்திருக்கிறார். அவருக்கு என் நன்றிகள். அவருக்குத் துணையாக இருந்து பிழைதிருத்தப் பணிகளைச் செய்து உதவிய சகோதரன் பாலசுப்பிரமணியத்திற்கும் எனது நன்றிகள். மனந்திரும்புதலாகிய சத்தியத்தை விளக்கி விரிவுரைகளையளிக்க எனக்கு வாய்ப்புக் கொடுத்த சபைகளுக்கும், அதன் போதகர்களுக்கும் என் நன்றிகள். கர்த்தர் தன் சித்தத்தின்படி இதனைப் பயன்படுத்தி ஆத்தும எழுச்சியைப் பலரின் வாழ்க்கையில் ஏற்படுத்தக் கிருபை செய்யவேண்டும் என்ற ஜெபத்தோடு இதை வெளியிடுகிறேன்.*

*கர்த்தரின் பணியில்,*
***ஆர். பாலா***

# பொருளடக்கம்


1. *பியூரிட்டன்களின் பார்வையில் மனந்திரும்புதல் அறிமுகம் 1* ....9
2. *மனந்திரும்புதல் எங்கே போய்விட்டது? அறிமுகம் 2* ....21
3. *மனந்திரும்புதல் எங்கே போய்விட்டது? அறிமுகம் 3* ....35
4. *மாய்மால மனந்திரும்புதல்* ....51
5. *மாய்மால மனந்திரும்புதல்* ஜோன் கல்ஹூனின் மேலதிக விளக்கங்கள் ....67
6. *மனந்திரும்புதல்: மாம்சத்தின் கிரியையா, கிருபையின் கனியா?* ....79
7. *யார் மனந்திரும்ப வேண்டும்? (பாகம் 1)* ....95
8. *யார் மனந்திரும்ப வேண்டும்? (பாகம் 2)* ....115
9. *மனந்திரும்புதலும் மனத்தாழ்மையும்* ....129
10. *பாவத்தின் பாவம்* ....145
11. *பக்திக்குரிய பாவத்தைக் குறித்த துக்கம்* ....155
12. *பாவ அறிக்கை* ....171
13. *பாவத்துக்காக வெட்கப்படுதல்* ....187
14. *பாவத்தை வெறுத்தல்* ....203
15. *பாவத்தைவிட்டு விலகுதல்* ....217
16. *மனந்திரும்புதலுக்கான வழிமுறைகள்* ....231
17. *தாமதிக்காமல் மனந்திரும்பு!* ....245

***பின்னிணைப்பு***

*மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும்* ....267

# பியூரிட்டன்களின் பார்வையில் மனந்திரும்புதல்

## அறிமுகம் 1

*2015ம் ஆண்டில் தமிழகத்தில் ஒருவர் என்னிடம் பியூரிட்டன் பெரியவரான தோமஸ் வொட்சனின் ஆங்கில நூலான Repentanceன் (மனந்திரும்புதல்) தமிழ் மொழிபெயர்ப்பைத் தந்தார். அது 2014ல் வெளிவந்திருந்த பதிப்பு. தோமஸ் வொட்சனின் நூல் தமிழிலிருக்கிறதா, என்று ஆச்சரியப்பட்டு அந்த நூலின் பிரதி ஒன்றை உடனடியாக வாங்கினேன். யார் மொழிபெயர்த்தது? மொழிபெயர்ப்பு சரியாக வந்திருக்கிறதா? என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள எனக்கு ஆவல் ஏற்பட்டது. ஒருமுறை அதை வாசித்துவிட்டு வைத்துவிட்டேன். அதை சிலருக்கு அறிமுகப்படுத்தியும் இருக்கிறேன்.*

*ஆங்கிலத்தில் 122 பக்கங்களுடைய இந்நூல், தமிழில் 70 பக்கங்களில் வெளிவந்திருக்கிறது. ஆங்கில நூலின் 11 அதிகாரங்கள் இதில் 9ஆக சுருக்கப்பட்டிருந்தன. அதற்குக் காரணம் ஆங்கில நூலில் முதல் அதிகாரம் இதில் முன்னுரையாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆங்கில நூலின் 3வது, 4வது அதிகாரங்கள் இதில் ஒரே அதிகாரமாக வந்திருக்கின்றன.*

*கோவிட்–19 லொக்டவுன் காலத்தில் வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்து எதைப்படிக்கலாம் என்ற கேள்வி எழுந்தபோது தோமஸ் வொட்சனின் மனந்திரும்புதல் நூல் என் நினைவுக்கு*

வந்தது. இந்த நூல் தரும் போதனையைப் படிக்க ஆரம்பிக்கலாம் என்று தீர்மானித்தேன். நூல்களைப் படிப்பதில் பலவிதங்கள் இருக்கின்றன. ஒன்று, உடனடியாக நூலுக்குள் நேரடியாகப்போய் அதன் உள்ளடக்கத்தைப் படித்துவிடுவது. இரண்டாவது, அதை யார் எழுதியது, எழுதியவரின் இறையியல் நம்பிக்கைகள் என்ன, யார் அதை வெளியிட்டது என்பது போன்ற பின்புல அம்சங்களை ஆராய்ந்து பார்த்துவிட்டு அதற்குப் பின் நூலைப் படிப்பது. இதில் இரண்டாவது முறையைத்தான் நான் கையாளப்போகிறேன். அதற்குக் காரணம் இருக்கிறது. நம்மினத்தில், அதாவது தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் 16ம் நூற்றாண்டு சீர்திருத்தவாத வரலாறு மற்றும், வரலாற்று இறையியல் ஆகியவற்றின் அடிப்படையில் அளிக்கப்படும் வேதபோதனைகள் மிகக் குறைவாக இருப்பதால் பொதுவாக கிறிஸ்தவர்களுக்கு சீர்திருத்தவாதம் மற்றும் பியூரிட்டன் போதனைகளில் பெரும்பாலும் பரிச்சயம் இல்லை. அத்தகைய நிலையிலிருப்பவர்களுக்கு முதலில் அவற்றை சுருக்கமாக அறிமுகப்படுத்திவிட்டு அக்காலப்பகுதிகளில் வெளிவந்த நூல்களை விளக்குவது மிகவும் அவசியமாக இருக்கிறது. சத்தியம் சத்தியமாகவே எப்போதும் மாறாமல் இருந்தபோதும், அது விளக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியோடு தொடர்புள்ளதாகவே அது எப்போதும் விளக்கப்பட்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பிரசங்கிக்கப்பட்டிருக்கும் சத்தியத்தின் முழுப்பரிமாணத்தையும் அறிந்துணர அந்தக் காலப்பகுதிபற்றிய விபரங்கள் மிகவும் உதவும்.

முதலில் நான் இரண்டு விஷயங்களை விளக்கவிரும்புகிறேன்.

1. நூலாசிரியர்
2. நூலுக்கான அறிமுகம்

### 1. நூலாசிரியர்

இங்கிலாந்தில் உள்நாட்டுப் போரின்போது தோமஸ் வொட்சன் பிரெஸ்பிடீரியன் கோட்பாடுகளில் ஆர்வம்காட்ட ஆரம்பித்தார். நாட்டின் அரசனை அவர் சார்ந்து நின்றார். முதலாம் சார்ள்ஸ்

கொலை செய்யப்படலாம் என்ற நிலை எழுந்தபோது அதை நிறுத்தும்படி ஒலிவர் குரோம்வெலைச் சந்தித்துப் பேசச்சென்ற பிரெஸ்பிடீரியன் போதகர்களில் ஒருவராக வொட்சன் இருந்தார். அரசனை மறுபடியும் நிலைநிறுத்த முயன்றவர்களில் ஒருவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கிறிஸ்டோபர் லவ், வில்லியம் ஜெங்கின்ஸ் போன்றோரோடு வொட்சன் 1651ல் சிறையில் தள்ளப்பட்டார். அவர் 1652ல் விடுவிக்கப்பட்டு வோல்புரூக்கில் இருந்த ஆங்கிலேய திருச்சபையின் புனித ஸ்டீவன்ஸ் சபையில் போதகராக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் மிகச்சிறந்த தேர்ந்த பிரசங்கத்தின் காரணமாக வொட்சனின் பெயர் நாடெங்கும் பிரசித்தி பெற்றது.

1662ல் இங்கிலாந்து அரசு ஒத்துழைப்புக் கட்டளைச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது, ஒத்துழையாமைப் பிரிவைச் சார்ந்து நின்ற காரணத்தால் வொட்சன் போதகர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். சபை நீக்கம் செய்யப்பட்ட ஒத்துழையாமைவாதிகள் நாட்டில் அதிக துன்பங்களை அனுபவித்தபோதும் வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் வொட்சன் வீடுகளிலும், விவசாயக் கூடங்களிலும், காடுகளிலும் தொடர்ந்து பிரசங்கம் செய்தார். 1666ல் இலண்டனின் பெருந்தீ விபத்துக்குப் பிறகு, ஒரு பெரிய அறையை மக்கள் கூடிவந்து பிரசங்கம் கேட்பதற்காக வொட்சன் ஏற்பாடு செய்தார். அவர் கர்த்தரின் பணியில் சபைக்கு வெளியில் இருந்து ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தார். 1672ல் மறுபடியும் பிரசங்கிப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெற்று பிஷப்கேட், குரொஸ்பி ஹாலில் ஸ்டீபன் சார்நொக் அவரோடு இணைந்து பணிபுரியும்வரையும், மூன்று வருடங்களுக்குப் பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டிருந்தார். ஸ்டீபன் சார்நோக் (1628–1680) இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு தலைசிறந்த ஆங்கில பியூரிட்டன் பிரசங்கியும், இறையியலறிஞருமாவார். அவருடைய எழுத்துக்களில் *The Existence and the Attributes of God* (கடவுளின் இருத்தலும் குணாதிசயங்களும்) மிக முக்கியமான நூல். ஸ்டீபன் சார்நொக் 1680ல் மரிக்கும்வரையும் வொட்சன் அவரோடு இணைந்து ஊழியத்தில் ஈடுபட்டிருந்தார். பின்பு உடல் நலம் பாதிக்கப்பட்டதால் ஓய்வு பெற்று வொட்சன் எசெக்ஸில் வாழ்ந்து வந்தார். 1688ல் தனிஜெபம் செய்துகொண்டிருந்த

வேளையில் வொட்சன் இறைபாதம் அடைந்தார். பார்ன்ஸ்டன் சபையைச் சார்ந்த கல்லறையில் அங்கு போதகராகப் பணிபுரிந்திருந்த அவருடைய மாமனார் புதைக்கப்பட்டிருந்த பகுதியிலேயே அவரும் புதைக்கப்பட்டார்.

தோமஸ் வொட்சன் பிரசங்கத்தில் வல்லமை பெற்ற நற்போதகராக இருந்தது மட்டுமல்லாமல் அநேக நூல்களை எழுதி எழுத்துப்பணியிலும் ஈடுபட்டு வந்தார். நிறைவான இறையியல் ஞானமுள்ளவராக, ஆழமான ஆவிக்குரிய அன்போடுகூடிய ஆத்துமாவைக் கொண்டவராக, தெளிவாகவும், தகுந்த உதாரணங்களைப் பயன்படுத்தியும், பயன்பாடுகளை அள்ளித்தந்தும் பிரசங்கிக்கக்கூடிய வல்லமை பெற்றவராக வொட்சன் இருந்தார். அவர் அருமையான பியூரிட்டன் பெரியவர்களில் ஒருவரும் பிரசித்தி பெற்றவருமாக இருந்தார். அவருடைய நூல்களில் சிறந்தவையாக *Body of Divinity, Ten Commandments, The Beatitudes, The Lord's Prayer, The Doctrine of Repentance* போன்றவை கருதப்படுகின்றன. கிறிஸ்தவ வாழ்க்கை பற்றிய பியூரிட்டன்களின் போதனையை அவருடைய *Harmless Doves: A Puritan view of the Christian Life* என்ற நூல் விளக்குகிறது. வொட்சன் சிறந்த எழுத்தாளர். ஏனைய பியூரிட்டன்களைப்போலவே அவருடைய எழுத்துக்களில் வேதம் எங்கும் வியாபித்துப் பரவிக்காணப்பட்டது. வேதத்தை அள்ளி, அள்ளித்தந்து தெளிவான விளக்கங்களோடு பயன்பாடுகளைப் பரவி விரிந்தோடும் வெள்ளப்பெருக்குப்போல் தன் எழுத்துக்களில் ஓடவிட்டிருந்தார் வொட்சன்.

## 2. நூலுக்கான அறிமுகம்

*1.* சீர்திருத்தவாத பியூரிட்டன் நூல்கள் நம்மினத்தாருக்கு உதவுமுகமாக மொழிபெயர்க்கப்படும்போது அவற்றிற்கு கிறிஸ்தவ வரலாறும், வரலாற்று இறையியலும் நன்கு தெரிந்தவர்களின் தெளிவான அறிமுக உரை அவசியம். அந்த அறிமுக உரை தோமஸ் வொட்சனின் இந்த நூலுக்கும் அவசியம். அதில்லாவிட்டால் விஷயம் தெரியாதவர்கள் இந்த நூல் கொடுக்கும் போதனைபற்றிய தவறான எண்ணங்களை

வளர்த்துக்கொள்ளுவதில் கொண்டுபோய்விட்டுவிடும். இதை நான் சொல்லுவதற்குக் காரணம் நம்மினத்துக் கிறிஸ்தவம் சீர்திருத்தவாத பியூரிட்டன் வேத இறையியலில் பரிச்சயம் பெற்ற சமுதாயம் அல்ல. தோமஸ் வொட்சனின் நூலின் ஆவிக்குரிய போதனையை அவர் காலத்து கிறிஸ்தவ சமுதாயம் விளங்கிக்கொள்ளக் கஷ்டப்பட்டிருக்காது. அவர்கள் பியூரிட்டன் இறையியலில் பரிச்சயமுள்ள தேர்ந்த கிறிஸ்தவர்களாக, வேதஞானமுள்ள கிறிஸ்தவர்களாக இருந்தனர். அத்தகைய கிறிஸ்தவர்களை மனதில்கொண்டே தோமஸ் வொட்சன் அந்தக்காலத்தில் இந்நூலை எழுதியிருக்கிறார். அதனால் இந்தப் போதனைக்கான ஒரு விளக்கமான இறையியல் அறிமுகம் அன்று தேவையாக இருக்கவில்லை. நாம் வாழும் 21ம் நூற்றாண்டின் நிலை வேறு. சீர்திருத்தவாதிகள், பியூரிட்டன் பெரியவர்கள் ஆகியோரின் பெயரையே அறிந்திராத சமுதாயத்தில் அவர்களுடைய இறையியல் போதனைகளை வெளியிடும்போது ஒவ்வொரு நூலுக்கும் காலத்துக்கேற்ற தெளிவான நல்ல அறிமுகம் அவசியமாகிறது.

2. தோமஸ் வொட்சன் விளக்கும் மனந்திரும்புதலையும், அதில் காணப்படும் ஆழமான விஷயங்களையும் இன்று நம்மினத்துக் கிறிஸ்தவ பிரசங்கிகளின் போதனைகளில் துப்பரவாகக் காணமுடியாது. ஒருசிலர் அங்குமிங்குமாக சீர்திருத்தவாத போதனை தெரிந்து பிரசங்கித்தால் தவிர, பொதுவாக இவற்றைக் காதாலும் கேட்கமுடியாது. நம்மினத்துக் கிறிஸ்தவ சுவிசேஷம், இயேசு எந்தக் கன்டிஷனும் காட்டாமல் எல்லோர் மேலும் அன்பாயிருக்கிறார்; அவரை விசுவாசிக்கத் தீர்மானித்தால் பரலோகம் நிச்சயம் என்பதாகவே இருக்கும். அப்படித் தீர்மானம் எடுப்பவர்களுக்கெல்லாம் அந்தத் தீர்மானத்தின்படியே ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். இது கிரியையினால் வரும் போலி விசுவாசம். இதில் மெய்யான மனந்திரும்புதலுக்கோ, மெய்யான ஆவிக்குரிய விசுவாசத்திற்கோ இடமில்லை. இப்படி ஞானஸ்நானம் எடுத்தவர்களே பாவத்தை மேற்கொள்ள முடியாமல் கிறிஸ்தவர்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு தொடர்ந்து பாவங்களைச் செய்து, மறைத்து, ஆவிக்குரிய எந்த சந்தோஷமும் இருதயத்தில் இல்லாமல், மனச்சாட்சியை புறத்தில்

ஒதுக்கிவைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இத்தகைய ஆவிக்குரிய சூழ்நிலையில் தோமஸ் வொட்சனின் நூலில் காணப்படும் ஆவிக்குரிய போதனைகளைப் புரிந்துகொள்ளுவது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும்; அத்தோடு அவர்களுக்கு இது ஆபத்தாகவும் அமைந்துவிடும்.

3. வேத இறையியலில், அதுவும் Ordo Salutis என்று அழைக்கப்படுகின்ற 'இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கில்' மனந்திரும்புதல் எந்த இடத்தில் வருகிறது, அதில் அதன் பங்கு என்ன என்பது தெரிந்திருக்க வேண்டும். இது இரட்சிப்புப்பற்றிய சீர்திருத்தவாத கிறிஸ்தவ இறையியல் போதனையில் மிகவும் அவசியமானது. இது தெரியாவிட்டால் மனந்திரும்புதலைப் பற்றிய வேதபோதனையை மிகவும் தவறான விதத்தில் நாம் புரிந்துகொள்ளும் நிலை உண்டாகும். சீர்திருத்தவாத போதனைகளுக்கு முரணான ஆர்மீனியனிசப் போதனை மனந்திரும்புதலுக்குப் பிறகே ஒருவனுக்கு மறுபிறப்பு கிடைக்கின்றது என்று போதிக்கிறது. இதைக் கவனமாக விளங்கிக்கொள்ள வேண்டும். ஆர்மீனியனிசப் போதனையைப் பொறுத்தவரையில் மனந்திரும்புதல் பாவியின் கிரியையாக இருக்கிறது. இந்தக் கிரியையினால் பாவி கடவுளோடு ஒத்துழைத்து அவனுக்குள் மறுபிறப்பு உண்டாகுவதாக ஆர்மீனியனிசம் விளக்குகிறது. முக்கியமாக ஒருவனுடைய ஆவிக்குரிய மாற்றத்தில் மனிதனுடைய கிரியைக்கு ஆர்மீனியனிசம் முக்கியத்துவம் அளிக்கிறது. இது மிகத் தவறான போதனை; வேதத்திற்கு முரணான மனிதனை முதன்மைப்படுத்தும் போதனை; கர்த்தருடைய இறையாண்மையை நிந்திக்கும் போதனை. இந்தப் போதனையைப் பின்பற்றுகிறவர்கள் தோமஸ் வொட்சனின் மனந்திரும்புதல் பற்றிய போதனையைத் தங்களுக்கு வசதியாகப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது.

4. இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கில் நீதிமானாக்குதல் மனந்திரும்புதலுக்கு முன்னால் வரவேண்டும். கிறிஸ்துவினால் ஒருவன் நீதிமான் என்று அறிவிக்கப்படுவதற்கு அவன் கிறிஸ்து தரும் ஈவாகிய விசுவாசத்தை அடைந்திருக்கவேண்டும். விசுவாசம் வருகிறபோது மனந்திரும்புதல் அதோடு இணைந்தே வருகிறது. இந்த இடத்தில் இறையியலறிஞர்கள் விசுவாசமா?

மனந்திரும்புதலா? எது முன்னால் வரவேண்டும் என்பதில் அதிகம் வாக்குவாதம் செய்யவில்லை. இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாதபடி இணைந்திருப்பதாக அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்; ஒன்றில்லாமல் மற்றது இருக்கமுடியாது என்பது அவர்களுடைய விளக்கம். விசுவாசம் இருக்கும் இடத்தில் மனந்திரும்புதலும் இருக்கும். மறுபிறப்பு ஒருவரில் நிகழ்ந்த பின்பே அவருக்கு இவை இரண்டும் கிடைக்கின்றன. மறுபிறப்பே ஒருவனின் இரட்சிப்பிற்கு ஆதாரமாக, அடித்தளமாக இருக்கிறது என்பது சீர்திருத்தவாத போதனை. அது நிகழ்ந்தபின்பே அதன் ஆவிக்குரிய விளைவாக விசுவாசமும் மனந்திரும்புதலும் ஒருவருக்குக் கிடைக்கிறது. ஆகவே, ஒருவன் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு அவன் கெட்டகுமாரனைப்போல மனந்திரும்புகிறபோது, அவனே மனந்திரும்பினாலும் அது கர்த்தரால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஈவாகவும், பரிசுத்த ஆவியானவரின் கிரியையாகவும் வேதம் விளக்குகிறது. மெய்யான ஆவிக்குரிய மனந்திரும்புதல் ஒருபோதும் மனிதன் தன் பாவநிலையில் செய்யும் கிரியை அல்ல; அது ஆவிக்குரிய மனிதனின் ஆரம்ப ஆவிக்குரிய கிரியை.

5. இரட்சிப்பின் படிமுறையில் மனந்திரும்புதலுக்கும், பரிசுத்தமாக்குதலுக்கும் இடையில் உள்ள பிரிக்கமுடியாத தொடர்பை விளங்கிக்கொள்ள வேண்டும். மறுபிறப்பை அடைந்து மனந்திரும்புகிற எவரும் பரிசுத்தமாகுதலைத் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் தவிர்க்க முடியாத ஆவிக்குரிய கடமையாக வைத்திருப்பார்கள். மெய்யான ஆவிக்குரிய மனந்திரும்புதல் ஒருவனின் பரிசுத்தமாகுதலில் சாகும்வரையிலான கிருபையாக இருந்து வருகிறது. அதாவது தொடர்ச்சியான ஆவிக்குரிய மனந்திரும்புதலை அவன் தன்னில் கொண்டிருந்து அதைத்தொடர்வதற்காகவே அவன் கிறிஸ்துவை விசுவாசிக்கிறான். ஆகவே, ஆர்மீனியனிசம் போதிப்பதுபோல் மனந்திரும்புதலை, கிறிஸ்துவை விசுவாசிக்கின்றபோது மட்டும் நிகழ்ந்து முடிந்துவிடுவதாக எவரும் நினைத்துவிடக்கூடாது. விசுவாசத்தின்போது காணப்படுகிற மெய்யான மனந்திரும்புதல் சாகும்வரையிலான தொடர்ச்சியான மனந்திரும்புதலை ஒருவனில் ஆரம்பித்து வைக்கிறது என்பதே வேதம் தரும்

போதனை. அத்தோடு அது பரிசுத்தமாக வாழ்ந்துவருகிற வாழ்க்கையில் அவசியமானதொன்றாக இருந்துவருகிறது.

*6.* போலியான ஆவிக்குரிய சூழலில் வாழ்ந்து வருகின்ற நம்மினத்து கிறிஸ்தவர்களுக்கு தோமஸ் வொட்சனின் மனந்திரும்புதல் நூல் இன்னொரு ஆபத்தை உண்டாக்கக்கூடியது. இங்கே நம் சபைகளைச் சேர்ந்தவர்கள் கவனத்தோடு நான் விளக்கப்போவதைச் சிந்திக்கவேண்டும்.

மனந்திரும்புதலைப்பற்றி ஆணிவேர் அக்குவேறாக வேதபூர்வமாக தோமஸ் வொட்சன் விளக்கி நமக்கெல்லாம் பெரிய துணை செய்திருந்தபோதும், அந்த மனந்திரும்புதலில் காணப்படும் அத்தனை ஆவிக்குரிய அம்சங்களும் ஏதோவொருவிதத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் காணப்படவேண்டியதும் அவசியமாக இருந்தபோதிலும், ஒவ்வொருவரின் விசுவாச அனுபவமும் ஸ்டீரியோ டைப்பாக ஒரேவிதத்தில் இருந்துவிடாது. ஒருவரில் நிகழ்ந்திருக்கும் இரட்சிப்பின் அனுபவம் அதேவிதத்தில் ஒவ்வொருவரிலும் நிகழும் என்று எதிர்பார்க்கக் கூடாது. இரட்சிப்பு ஒவ்வொருவரிலும் காணப்பட வேண்டுமே தவிர அது ஒரேவிதத்தில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொருவரிலும் நிகழாது. உதாரணமாக, பாவியாகிய ஒருவன் பெரும்பாவங்களைச் செய்து வாழ்ந்திருந்தபோதும், சுவிசேஷத்தைக் கேட்டு அவன் உடனடியாக அதிரடியாக மனந்திரும்பிவிடலாம்; பவுலைப்போல. இன்னொருவன் பாவத்தை உணர்கிற அனுபவத்தை நீண்ட நாட்கள் அனுபவித்து அதன் பிறகு விசுவாசத்தை அடைந்திருப்பான். இத்தகைய பாவ உணர்வை நீண்ட நாட்கள் அனுபவித்து இரட்சிப்பு அடைந்தவர்களைப் பற்றி டாக்டர் மார்டின் லொயிட் ஜோன்ஸ் தன்னுடைய நூலொன்றில் விளக்கியிருக்கிறார். அவருடைய முதல் சபை அனுபவத்தில் அவருடைய பிரசங்க ஊழியத்தில் இது நிகழ்ந்திருக்கிறது.

அத்தோடு, பாவத்தை உணர்கின்ற அனுபவத்தையும் ஒருவர் அதனால் மிகவும் பாதிப்படைந்து கண்ணீரோடும், நடுக்கத்தோடும் விசுவாசத்தை அடைந்து நமக்கு விளக்கக்கூடியவராக இருப்பார். முக்கியமாக பாரதூரமாக பாவம் செய்தவர்கள் இந்தவிதத்தில் அது உணர்த்தப்பட்டவர்களாக இருப்பார்கள்; அதனால்

அவர்களுடைய வருத்தமும் ஆழமானதாக இருக்கலாம். அதேநேரம் இன்னொருவர் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது அவரில் பாவ உணர்தல் உண்டாகியிருந்தபோதும் இந்தளவுக்கு பாதிப்பு இருந்திருக்காது. ஆகவே, முதலாவது நபரில் காணப்பட்ட அளவுக்கு பாவ உணர்தல் எல்லோரிலும் இருந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. பாவத்தை ஒருவர் அறிந்து உணர்ந்திருக்க வேண்டுமே தவிர, அதை உணர்வதில் ஒவ்வொருவருக்கும் சமமானவிதத்தில் அதன் அனுபவத் தன்மை இருந்திருக்கவேண்டும் என்று கூறுவது முற்றிலும் தவறானது.

தோமஸ் வொட்சனின் நூலை வாசிக்கிறவர்கள் அவர் விளக்கியிருக்கும் பாவ உணர்த்தல் பற்றிய உண்மைகளை வாசித்துவிட்டு ஸ்டீரியோ டைப் அனுபவத்தை ஒவ்வொருவரிலும் எதிர்பார்க்கும் ஆபத்தில் விழுந்துவிடலாம். ஜோன் நியூட்டனுக்கு பாவஉணர்த்துதல் பயங்கரமானதாக இருந்திருக்கிறது என்பதை அவருடைய சரிதத்தை வாசிக்கிறவர்கள் அறிந்துகொள்ளலாம். அவர் இரட்சிப்படைந்தபின் வாழ்நாள் முழுதும் வருந்தியிருக்கிறார். அத்தனை ஆழமானதாக அந்த அனுபவத்தை நாம் ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் எதிர்பார்ப்பது தவறு. கெட்ட குமாரனுடைய பாவ உணர்த்துதல் அவன் செய்த பாவங்களுக்குத் தக்கதாக ஆழமானதாக இருந்திருக்கிறது. அதேநேரம் நாகமானில் அது வித்தியாசமானதாக இருந்திருக்கிறது. இருவருமே பாவஉணர்தலை அடைந்திருந்தார்கள்; அதன் தன்மை ஒரேவிதத்தில் இருந்திருந்தபோதும், அளவு வித்தியாசமானதாக இருந்திருக்கிறது. முக்கியமாக சிறுவயதில் விசுவாசத்தை அடைகிறவர்களில் ஆழமான, நீண்டநாட்களுக்கான பாவஉணர்த்துதலை எதிர்பார்க்க முடியாது. அவர்கள் ஒழுக்கக்கட்டுப்பாட்டைப் பின்பற்றும் குடும்பத்தில் இருந்து வந்திருந்தால் பெரிய பாவங்களைச் செய்திருக்க மாட்டார்கள். அவர்களுடைய வயதுக்கும் அனுபவத்துக்கும் ஏற்றபடியே அவர்களுடைய மனந்திரும்புதலும் இருக்கும்.

இந்த இடத்தில் போதகர்கள் 'ஆத்தும வைத்தியர்களாக' ஒவ்வொருவரின் இரட்சிப்புக்குரிய அனுபவத்தை நிதானித்து உணரக்கூடியவர்களாக இருக்கவேண்டும். இதில் அவர்களுக்கு

முதிர்ச்சியும் அனுபவமும் இருப்பது அவசியம். இதனால்தான் புதிய கிறிஸ்தவர்கள் போதகஊழியத்தை நாடக்கூடாது என்கிறது வேதம். இந்த விஷயத்தில் நிதானம் ஒருவருக்குத் தேவைப்படுகிறது. அதிக உணர்ச்சிவசப்படும் நபராக ஒருவர் இருந்தாலும் ஆபத்து. அவர் உணர்ச்சிவசப்பட வைக்கும் இரட்சிப்பின் அனுபவத்தையும், உணர்ச்சிவசப்பட்டு அதை விளக்கும் நபர்களையுமே மெய்யான கிறிஸ்தவ அனுபவம் பெற்றவர்களாக நினைத்துவிடக்கூடும். நிதானத்தோடும், பக்குவத்தோடும் நடந்துகொள்ளுவதும் இந்த விஷயத்தில் மிகவும் அவசியம். பெரிய கூட்டத்தில் மட்டும் கூவிவிட்டு, அதற்குப் பிறகு கூட்டத்திற்கு வந்த மக்களோடு எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்துவரும் நவீன பிரசங்கிகளுக்கு இந்த இறையியல் உண்மைகளெல்லாம் தேவைப்படாது. மெய்யான சபை நடத்தும் போதகர்கள், அதுவும் சீர்திருத்த சபை நடத்தும் போதகர்கள் நிச்சயம் ஆவிக்குரிய ஆத்தும ஆலோசகர்களாக பக்குவத்தோடு நடந்துகொள்ளவேண்டும்.

7. அடுத்தாக, பாவ அறிக்கை செய்வது (Confession of sin) இரட்சிப்படைந்த ஒவ்வொருவரிலும் காணப்பட வேண்டும். ஆனால், வேதம் அந்தப் பாவ அறிக்கையை ஒரு கூட்டத்தில் செய்யவேண்டும் அல்லது கட்டாயம் ஒரு போதகரிடத்தில் பட்டியல் போட்டுச் செய்யவேண்டும் அல்லது குறிப்பிட்ட சில மனிதர்களின் முன் செய்யவேண்டும் அல்லது எழுதி சாட்சியாக வெளியிடவேண்டும் என்றெல்லாம் எந்த இடத்திலும் எதிர்பார்க்கவில்லை. ஒன்றை மட்டும் நிச்சயமாக எதிர்பார்க்கிறது; கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் ஆண்டவரிடம் நிச்சயம் பாவ அறிக்கை செய்யவேண்டும். அப்படிச் செய்கின்ற பாவ அறிக்கை உளப்பூர்வமானதாக உண்மையானதாக இருக்கவேண்டும். ரோமன் கத்தோலிக்க மதத்தில் செய்வதுபோல் ஒரு குருவின் கைக்கு முத்தமிட்டு ஒரு மூடிய அறையில் இருந்து பாவ அறிக்கை செய்யும் முறையை வேதம் எந்த இடத்திலும் விளக்கவில்லை. அப்படிப் பாவ அறிக்கை செய்து பாவமன்னிப்பு அடைவது பற்றியும் வேதத்தில் வாசிக்கமுடியாது.

வேதம், மறுபிறப்பையும், பாவமன்னிப்பையும் நீதிமானாக்குதல் மூலமாக அடைந்த ஒருவனே பாவ அறிக்கையைச் செய்வான்

என்று விளக்குகிறது. பாவ அறிக்கை செய்து பாவமன்னிப்பை அடையமுடியாது. பாவமன்னிப்பை அடைந்தபிறகே பாவ அறிக்கை வருகிறது. கெட்ட குமாரன், ஆலயத்துக்குப் போன ஆயக்காரன், சகேயு, சமாரியப்பெண், நாகமான் போன்ற எல்லோரிலும் பாவமன்னிப்பை அடைந்தபிறகே அவர்கள் பாவ அறிக்கை செய்திருப்பதைக் கவனிக்கிறோம். அதுவும் ஒவ்வொருவருடைய பாவ அறிக்கையும் ஒரேவிதமானதாக இருக்கவில்லை.

கிறிஸ்தவர்கள் தங்களுடைய பாவங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு மன்னிப்பு அடையும்படி வேதம் சொல்கிறதுதான் (யாக்கோபு 5:16). ஆனால், அதை ஸ்டீரியோ டைப்பில் இயந்திரரீதியில் செய்யும்படிச் சொல்லவில்லை. நான்கு காரணங்களுக்காக பாவ அறிக்கை செய்யலாம்.

1. ஒருவருக்கெதிராக நாம் பாவம் செய்திருந்தால் அதை அறிக்கையிட்டு சகோதரனிடத்தில் மன்னிப்புக்கேட்டு ஒப்புரவாகலாம்.
2. கணக்குக்கொடுத்து விசுவாசத்தோடு கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்துவதற்காக நாம் நம்பிக்கை வைத்திருக்கும் ஒருவரிடம் நம் பாவங்களை அறிக்கையிட்டு அவருடைய துணையைப் பயன்படுத்தி பாவம் செய்வதைத் தவிர்த்து வாழலாம்.
3. சகோதரன் நமக்கெதிராகப் பாவம் செய்திருக்கும்போது அவன் திருந்தாதிருக்கும் நிலையில் சபை மூப்பரிடம் அதை அறிவித்து அவனைத் திருத்தி ஒப்புரவாகு வதற்காக அதைச் செய்யலாம் (மத்தேயு 16).
4. பகிரங்கமாக சபையைப் பாதிக்கும்விதத்தில் ஒருவர் பாவம் செய்திருந்தால் சபை மூப்பருக்கு அதை அறிவித்து திருத்த நடவடிக்கைக்கு ஒப்புக்கொடுப்ப தற்காக அதைச் செய்யலாம்.

இத்தகைய காரணங்களுக்காக பாவ அறிக்கை செய்வது அவசியமாகிறது. இவற்றை வேதம் எதிர்பார்க்கிறது. இவற்றிற்கு

அப்பால் போய் தேவையில்லாமல் சபைக்கூட்டங்களிலோ, திருவிருந்து எடுக்கும்போதோ எல்லோர் முன்னிலையிலுமோ, சாட்சி சொல்லும்போதோ, சாட்சிக் கையேட்டில் எழுதியோ பாவ அறிக்கை செய்யும்படி வேதம் சொல்லவில்லை. அப்படிச் செய்வது பாவத்தைப் பாவமாகப் பார்க்காமல், அதைச் சாதாரணமானதாக எடைபோட்டுவிடுகிற நிலைமையை உருவாக்குகின்றது.